# மக்கள் வாழ்வறியா ஆட்சியாளர் வீழ்ச்சியே

# அடைவர்

## மேனாடுகளின் வரலாறுகளைப் பார்

—————(0)—————

## கிண்டல் பேசும் சில்லறைகளுக்கு நன்றி

Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 27—12—50 | மணி 25

## அடக்குமுறையை அள்ளி வீசுபவர்க்குத் தோழர் கருணாநிதி எச்சரிக்கை

(நமது தனி நிருபர்)

காஞ்சிபுரம், டிச. 24—

"தெருவின் ஓரத்திலே, வீதிகளிலே, குப்பைத் தொட்டிகளின் அருகிலே, சாலை ஓரங்களிலே பிணம். உண்ண உணவில்லை, இருக்க இடமில்லை, உடுத்த உடை இல்லை. ஆனால் வண்டி—வண்டியாக மாமிசம் ஏற்றிச் செல்லப்படுகிறது தெருக்களிலே. இவைகள் எங்கே செல்கின்றன. யாருக்கு அனுப்பப்படுகின்றன. இவைகளைக் காண, பசியுடன் துடித்துக்கொண்டிருக்கும் மக்களின் நிலை. மாமிச வண்டிகள் செல்லுமிடம் தெரிந்தது. அவை எதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் தெரிந்தது. ஆனால் நிலையோ பரிதாபம்?

பிற்போக்கின் பிறப்பிடமாய், அக்கிரமத்தின் அணிகலனாய், டாம்பீக வாழ்க்கையின் சமர்த்தனாய் வாழ்ந்தவர்தான் சியாங்—கே—ஷேக். இன்று இவர்களின் முடிவு மிக-மிக பரிதாபத்திற்குறியது. பார்மோசா தீவிலே அடைக்கலம் என்று இன்று காலை நடைபெற்ற திராவிடர் முன்னேற்றக் கழக மாநாட்டின்போது தோழர் மு. கருணாநிதி சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:- கூண்டிலே சிக்கிய கிளி, வலையிலே சிக்கிய மான், தூண்டிலே சிக்கிய மீன் தங்களின் விடுதலைக்குத் துடிக்கின்றன. அதைப்போலவே அடிமைப்பட்ட இனம், ஒருகாலத்தில் உன்னதமாக வாழ்ந்த இனம், தனது விடுதலைக் கிளர்ச்சியை நடத்துகிறது. விடுதலைக் கிளர்ச்சி என்றால், தூக்குமேடையிலே தொங்கிய தோழர்களின் நினைவு நமக்கு வருகிறது. ரஷ்யாவிலே ஏற்பட்ட விடுதலைப் போர், பிரான்ஸ்தேசத்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற போராட்டம். அமைதி தவழ தாழ்ந்த சீன மக்களின் குமுறல் இவைகள் எல்லாம் ஏன் தோன்றின?

மக்களின் வாழ்வறியா மன்னனின் ஆட்சி மீது வெறுப்புக் கொண்ட மக்கள் ஜார் ஆட்சியை ஒழித்துக்கட்டினார்கள். தெருவின் ஓரத்திலே, வீதிகளிலே, குப்பைத் தொட்டிகளின் அருகிலே, சாலை ஓரங்களிலே பிணம். உண்ண உணவில்லை. இருக்க இடமில்லை. உடுத்த உடை இல்லை. ஆனால் வண்டி—வண்டியாக மாமிசம் ஏற்றிச் செல்லப்படுகிறது. தெருக்களிலே இவை எங்கே செல்லுகின்றன. யாருக்கு அனுப்பப்படுகின்றன என்பதைக் காண, பசியுடன் துடித்துக்கொண்டிருக்கும் மக்களின் நிலை. மாமிச வண்டிகள் செல்லுமிடம் தெரிந்தது. அவை எதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் தெரிந்தது. ஆனால் நிலையோ பரிதாபம். பிரான்ஸ் நாட்டுமன்னன் தனது கோமளவல்லிகளுடன் சரசசல்லாபத்தில் ஈடுபட்டுள்ளான். ஒரு கையிலே மதுவும், மற்றொரு கைப்பிடியிலே மங்கையும் என்ற நிலையில் இருக்கிறான்.

இந்த நேரத்தில் மாமிச வண்டிகள் அரண்மனை வாசலில் நுழைந்தது. அங்கே தயாராகக் காத்துக் கொண்டிருக்கும் நாய்களுக்கு அந்த மாமிசம் போடப்படுகிறது.

2-ம் பக்கம் பார்க்க

## நம் இயக்கம் முன்னணி இயக்கம்

—————(0)—————

## நாட்டின் உரிமையாளன் உரிமையற்றிருப்பதா?

—————(0)—————

### பன்மொழிப்புலவர் அப்பாதுரை அவர்களின் பேச்சு

(நமது தனி நிருபர்)

காஞ்சிபுரம், டிச. 24—

செங்கற்பட்டு மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு இரண்டாம் நாள் நிகழ்ச்சி இன்று காலை 10 மணிக்குத் துவங்கியது. துவக்கத்தில் நாகூர் தோழர் இ. எம். அனிபா நாட்டு வணக்கப் பாடல்களை இசைத்தார்.

முதல் நாள் மாநாட்டைக் காட்டிலும் இரண்டாம் நாள் மாநாட்டில் பொதுமக்கள் ஏராளமாக வந்து கூடி இருந்தனர். இந்த மாநாட்டிற்கு வந்திருந்த சுமார் 3 ஆயிரம் பெண்களில், பார்ப்பன பெண்களும் பலர் வந்து கலந்து கொண்டது மிகவும் பாராட்டத் தக்கதாக இருந்தது. பின்னர் மாநாட்டின் தலைவர் தோழர் வேலூர் சி. பி. சிற்றரசு தலைமை வகித்து, முதன் முதலாக பன்மொழிப் புலவர் தோழர் கா. அப்பாதுரை அவர்களை பேசுமாறு பணித்தார்.

### தோழர் கா. அப்பாத்துரை

தோழர் கா. அப்பாத்துரை ஆற்றிய சொற்பெருக்கின் சாரம் வருமாறு:—

நமது இயக்கமானது நல்லதொரு "முன்னணி இயக்கம். தனது பெயருக்கேற்ப, கழகமானது இன்று நல்ல

(4-ம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியல் மன்றம் அமைப்போம்

—————:0:—————

### நம் நாடு உண்மையில் சுதந்தர நாடா?

—————(:0:)—————

### தோழர் கே. ஏ. மதியழகன் பேச்சு

காஞ்சி, டிச. 24—

சட்ட திட்டக்குழு அமைப்பாளர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், காஞ்சீபுரம் மாநாட்டின் 2-ம் நாள் நிகழ்ச்சியின்போது "அரசியல் அமைப்பு" என்பது பற்றிப் பேசியதன் சுருக்கம் வருமாறு:-

இன்றைய அரசியல் அமைப்பு நமக்குக் கெடுதியை உண்டாக்குகிறது. கோடிக்கணக்கானமக்களின் மரண சாசனத்தின் மூலம் பெறுவது ஒரு நாட்டின் சுதந்திரம் அந்த நாட்டு அரசியல் அமைப்பைப் பொறுத்தே இருக்கிறது அதன் வாழ்வும்—தாழ்வும்.

சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், இவைதான் மனிதனுக்கு இன்றியமையாதவை. இவைகளைப்பெற நாம் அடையும் துன்பம் கொஞ்ச-நஞ்சமன்று.

அவ்விதம் கஷ்டப்பட்டுப்பெற்ற சுதந்திரத்தின், அரசியல் அமைப்பு வெறும் கேலிக்கூத்தாக இருக்கக் கூடாது என்பதுதான் எமது எண்ணம். நாம் இன்று பெற்றுக்கொண்டதாகச் சொல்லப்படும் சுதந்திரம் உண்மையிலேயே சுதந்திரமன்று. ஓரளவு இதை ஒரு கண்துடைப்பு சுதந்திரம் என்று கூறலாமே தவிர வேறல்ல. எனவே இந்தச் சுதந்திரம் நம்மை-பல நடராசன்களைச் சிறைக்கனுப்பலாம். ஜனநாயகத்தைக் கேலி செய்யும் இந்த அரசியல் சட்டத்தின் சூழ்நிலையிலிருந்து நாம் கட்டாயம் மாறித்தான் ஆகவேண்டும்.

### சட்டமன்றம் காணுவோம்

வைகைக் கரையிலோ, அல்லது காவேரிக் கரையிலோ, சட்டக் கல்லூரி மாணவர்கள்கூடி ஓர் அரசியல் மன்றம் அமைக்கத்தான் போகிறோம். இது உறுதி. 25 ஆண்டுகளுக்கு முன்னால் நாம் டில்லியிலே பிரதம மந்திரியாக இருப்போம் என்று பண்டித நேரு கனவுகூடக் கண்டிருக்க முடியாது. ஆனால் அது இன்று நடைபெறும்போது, தென்னாட்டிலே ஓர் தனிச் சட்டமன்றம் அமைத்து, அதன் பிரதிநிதியாக அண்ணா டில்லிக்கு அழைக்கப்பட்டுச் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறத்தான் போகிறது. சமாதானத்தின் குரல் திக்கெட்டும் முழங்கி, விரைவிலே திராவிட நாடு காண நாம் முழு முயற்சியுடன் வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாலைமணி

சென்னை 27—12—50 புதன்கிழமை

# அமைச்சர் அறிந்திருப்பார்

திராவிடர் இயக்கத்தின் கொள்கை என்னவென்று சென்னைச் சட்டசபையில் கேள்வி கேட்ட அங்கத்தினர் ஒருவருக்கு விடையளிக்கத் தெரியாமல், அக்கட்சித் தலைவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு விடையளித்த அமைச்சரும், அவர் போக்கைத் திருத்த முன்வராத சட்டசபைத் தலைவரும் நம் நாட்டில்தான் இருக்கிறார்கள்...

நாட்டிலே நடைபெறும் கட்சிகள் எந்தக் கொள்கையுடன், எந்நோக்கம் கருதிப் பணியாற்றுகின்றனவென்பதை அறிந்திருத்தல் நாடாள வந்த அமைச்சர்களின் இன்றியமையாக் கடமையாகும். ஆனால் அந்தக் கடமைகளை உணராதவர்கள் நம் நாட்டு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அமைச்சர் இவ்வாறு தம் அறியாமையை சட்ட சபையில் தெரிவித்தபோது, சட்டசபைத் தலைவர், கடமையைச் சரிவர நிறைவேற்றாதிருக்கும்செயலை அமைச்சருக்கு எடுத்துக் காட்டியிருக்க வேண்டும், அதையும் சட்டசபைத் தலைவர் செய்யாமல் விட்டது கண்டு வருந்துகிறோம்.

நாட்டு முன்னேற்றத்தையும் மக்கள் உயர்வையும் கருதுபவர் எவராயிருந்தாலும், நாட்டின் நிகழ்ச்சிகளை அன்றாடம் அறிந்திருப்பர். அதிலும், நாடாள வந்தவர்கள் நாட்டின் நிலைமையை, நாட்டிலுள்ள கட்சிகளை, அவற்றின் போக்கை, மக்கள் மனப்பான்மையை, மக்கள் கூட்டங்கள் கூடி வெளியிடும் கருத்தைக் கவனிக்க வேண்டும். கவனித்து, நாட்டினரின் கருத்துக்கு ஏற்ப, ஆவன செய்ய முயலுதல் வேண்டும்.

ஆனால், நம் நாட்டை யாளவந்திருப்போருக்கு இவற்றைப் பற்றிக் கவலையில்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் தங்கள் பதவிகள் பறிபோகாதிருப்பதற்கு இப்போது முதற்கொண்டே என்னென்ன திட்டங்கள் வகுக்க வேண்டுமென்பதேயாகும்.

நம் நாட்டு அமைச்சர்களின் போக்கு இவ்வாறிருப்பதை அறிந்தே காஞ்சிபுரத்தில் கூடிய திராவிட முன்னேற்றக் கழக மாநாடு, திராவிட இயக்கத்தவரின் கொள்கையும் நோக்கமும என்னவென்பதை நன்கு எடுத்து விளக்கியிருக்கின்றது.

தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தம் சொற்பொழிவின் மூலம் ஆட்சியாளர்களுக்கு இடித்துரைக்கும் உண்மைகள் ஒரு புறமிருக்க, மாநாடு நடந்து முடிந்த நிகழ்ச்சியே, அமைச்சர்களின் கண்களைத் திறந்து வைக்கப் போதுமானதாயிருக்கிறது.

இரண்டு நாட்கள்வரை காஞ்சீபுரத்தில் கூடியிருந்த மக்கள் தொகையையும், மாநாடு பார்ப்பனப் பொது மக்களையும் கவர்ந்து தன்னகத் தோர்த்துக் கொண்ட நிகழ்ச்சியையும், மாநாட்டையுப நாடகத்தையும் காண வந்திருந்த பார்ப்பன மாந்தர் கூட்டத்தையும் அமைச்சர்கள கண்டிருந்தால், திராவிட இயக்கத்தினரின் கொள்கையும் நோக்கமும் எவ்வளவு தொலைவு மக்கள் மனத்தில பாய்ந்திருக்கின்றனவென்பதையும் திராவிடர்கள் பார்ப்பனர்களைப் பழிப்பவர்களல்லவென்பதையும், நேர்மையற்ற, நீதியில்லாத, உயர்வு தாழ்வுத் தத்துவங்களையும் மக்களை மூடத்தனத்தில் ஆழ்த்தும் கொள்கைகளையுமே திராவிடர்கள் கண்டிக்கின்றனரென்பதையும், இதை நன்குணர்ந்த பரந்த நோக்குக்கொண்டிருக்கும் பார்ப்பனர்களும் திராவிடர் மாநாட்டில் கலந்து கொண்டிருப்பதையும் அறிந்துகொள்ள முடியும். ஆனால் பிடிவாதம் ஒன்றைத் தவிர வேறொன்றையும் அறிந்திராத பேர் வழிகள் திராவிடர் கட்சி வலுப் பெற்றால் தங்கள் பதவிகள் போய்விடுமோ என்றஞ்சும் பேர்வழிகள், திராவிடர் இயக்கத்தின் உயர்ந்த தத்துவத்தையும் கொள்கையையும் உணர்ந்திருப்பதாகக் காட்டிக் கொள்வார்களா? எனவேதான் சட்டசபையில் அமைச்சர் தமக்கொன்றும் தெரியாதவரைப் போல நடந்துகொள்ள வேண்டிவந்தது. அதற்காகத்தான் நம் தலைவர்களும் அமைச்சரின் அறியாமையை விளக்கி இனியேனும் அறிந்துகொள்ளுமாறு செய்ய காஞ்சீபுரம் மாநாட்டைக் காங்கிரஸ்காரர்களின் கண் திறப்பு மாநாடாக ஆக்கியுள்ளார்.

இனியேனும் காங்கிரஸ் தோழர்கள் உண்மையை உணர்ந்து அடக்குமுறை பலிக்காதென்பதை யறிந்து, நேர்மையாக நடந்து கொள்வார்களா?

## மக்கள் வாழ்வறியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிலே மக்களுக்கு உணவில்லை. இங்கு அரண்மனையில் நாய்களுக்கு மாமிசமா என்றனர் மக்கள், பதை-பதைத்தனர். அந்த நாய் கூட்டத்தின் மீது பாய்ந்தனர். நாய்களுக்கும், மனித வர்க்கத்திற்கும் போர். இதற்கிடையே அரண்மனை பட்டாளங்கள் வருகின்றன. அந்தப் பட்டாளங்களின் குதிரைகளின் காலடியிலே சிக்கி, வேதனைப் பட்ட பாட்டாளிவர்க்கத்தின் விலா எலும்புகள் நொருங்குகின்றன. போர் எங்கும் போராட்டம் மூளுகிறது. கடைசியாக ஆதிக்க வெறி கொண்ட பிரான்ஸ் நாட்டு மன்னன் மடிகிறான். இறுதியில் பாட்டாளி மக்களின் வெற்றி. இது பிரான்விலே பிற்போக்கின் பிறப்பிடமாகவும், அக்கிரமத்தின் அணிகலனாகவும், டாம்பீக வாழ்க்கையின் சமர்த்தனைய் வாழ்ந்தசியாங்கே ஷேக்கின்று என்ன ஆனார். பார்மோசா தீவிலே அடைக்கலம். குமுறி எழும் மக்கள் உள்ளத்தை உணர முடியாதவர்களின் கோர முடிவு இது இந்த நாட்டிலேதான் மாசே துங் தோன்றினான். நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டது சைனாவிலே. ஆனால் சைனா செஞ்சீனாவாக காட்சி யளிக்கிறது.

### யார் இந்த மாசேதுங்

கடந்த யுத்த காலத்திலே சைனாவிற்கும், ஜப்பானுக்கும் யுத்தம் மூண்டது. அந்தயுத்தத்தில சைனாவின் பெரும் பகுதி ஜப்பன் கையிலே சிக்கிச் சீரழிந்தது. ஜப்பானியர்களின் தொல்லை தாங்காத சீன இராணுவத்தினர் பின் வாங்கிச் சென்றனர். இப்படிப் பின் வாங்கிச் செல்லுகையில் கர்ப்பிணிகளும், குழந்தைகளும் கூடப் பின் வாங்கினார்கள். இப்படிப் பின்வாங்கும் சமயம் பல சீனப் பெண்களுக்குப் பிரசவம் ஆகிவிட்டது. அப்படிப் பிரசவித்த குழந்தைகளைத் தாங்கள் இட்டுச் செல்ல முடியாத காரணத்தால் ஆங்காங்கே விட்டுச் சென்றனர். அப்படி விட்டுச் சென்ற குழந்தைகளில் ஒருவன் தான் மா சே துங். சாதாரணசோல்ஜரின் குழந்தை தாய், தகப்பனற்று அனாதையாக ஏழை விவசாயிடம் வளர்ந்தவன்தான் மாசேதுங். இன்றைய தினம் தனது தாய் நாட்டின் விடுதலைக் கிளர்ச்சியை முன்னின்று நடத்துகிறார். இது போன்ற கிளர்ச்சி மக்களிடத்திலேதான் தோன்ற வேண்டும்.

### நாம் செய்தோம்

இது போன்ற விடுதலைக் கிளர்ச்சி செய்யும் நம்மைக்கண்டு தேசியத் தோழர்கள் கேலி செய்கின்றனர். ஆங்கிலேயர்களின் தாசர்கள் என்று தூற்றுகின்றனர். சாந்தியாரும், பகவத்சிங்கும், மோதிலால் நேரும் வெள்ளையனை எதிர்த்துப் புரட்சிசெய்வதற்குமுன்னால் வீரன் கட்டபொம்மன் ஆங்கிலேயர்களை எதிர்த்திருக்கிறான். இது சரித்திர உண்மை. வெள்ளையனை ஒழித்துக் கட்ட முனைந்தவர்கள் நாம்.

இன்று நம்மைப் பார்த்து இவர்கள் வெள்ளைக்காரர்களின் தாசர்கள் என்று சொல்கிறார்கள். இதை நீங்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும். இது போன்றுதான் நமது திராவிட நாடு பிரிவினைக்கும் விடுதலைக் கிளர்ச்சி தேவை என்று கருதினோம். இந்த நேரத்தில் நமக்குப் பல தொல்லைகள் வருகின்றன. ஆனால் நாம் மேல்நாட்டிலே விடுதலை அடைய அந்த நாடுகள் பட்ட கஷ்டமும், துன்பமும் அறிந்தவர்களே, சீனாவில் சியாங்கேஷேக்கை எதிர்த்து மா-சே-துங் பட்ட கஷ்டம் கொஞ்சமன்று எனினும் இறுதியில் வெற்றி நமக்குத்தான் கிடைக்கும்.

நாம் விடுதலைக் கிளர்ச்சி துவக்கியுள்ளதை மந்திரிகள் முதல் சாதாரண காமராஜர் வரை கிண்டல் செய்கின்றனர். 'வடநாட்டுக்கடை முன்பு மறியலா' என்கிறார்கள் இது வளர்ந்துகொண்டேபோய் எங்கே முடியும் என்கிறார்கள். நான் அவர்களுக்குக் கூறுகிறேன் 'நீங்கள் நன்றாகக் கிண்டல்செய்யுங்கள், உங்கள் கிண்டல்மூலம்தான் நாங்கள் வளர்ச்சியடைகிறோம்' என்றுதான் கூறுவேன். அமைதியாகப் பிரசாரம் செய்யும் எம்மீது அடக்குமுறைகளை வீணாக அள்ளி வீசவேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறேன். மீறினால் அதனால் ஏற்படும் பலாபலன்களை மந்திரிமார்கள் உணரத்தான் போகிறார்கள் என்று கூறுகிறேன்.

வருங்காலம், மிகவும் நெருக்கடியானதாக இருக்கலாம். நமது கூட்டங்களுக்குத் தடை விதித்தால் தடை விதிக்கப்பட்ட நாடகத்தை நடத்திக்காட்டவும் நாம் தயாராக இருக்கிறோம் என்று ஆளவந்தார்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

வீணாக, அடக்குமுறையைவிட்டு விட்டு சமாதான முறையில்நாட்டுப் பிரிவினைக்கு வழி தேடவேண்டுமே அல்லாது நம்மீது மோதினால் அதனால் நஷ்டமடையப் போவது நாமல்ல அவர்கள்தான் என்றார்.

---

## பட்டினிக்கு நெசவாளர் பெண் பலி

நெசவாளர்களின் நைந்த நிலை

சேலம், டிச. 24—

சேலம் மாவட்டத்தில் உள்ள எலம்பள்ளியில் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த லட்சுமி என்ற பெண் வறுமை காரணமாக தன்னுடைய ஒரு வயதுள்ள பெண் குழந்தையை மடியில் கட்டிக் கொண்டு கிணற்றில் விழுந்து தற்கொலைசெய்துகொண்டாள் போதுமான நூல் கிடைக்காததால் இவர்களுடைய குடும்பம் வாடி வந்தது.

வறுமையால் பல நாட்கள் பட்டினிகிடக்க நேரிட்ட லட்சுமி உயிரை மாய்க்க தீர்மானித்தாள். தான் இறந்த பிறகு தன்னுடைய குழந்தை துன்பத்திற்குள்ளாகக் கூடாது என்ற நோக்கத்தோடு குழந்தையுடன் சேர்ந்து கிணற்றில் விழ முடிவுசெய்தாள். சாகும் போதும் குழந்தை தன்னுடைய அணைப்பில் இருக்க வேண்டுமென்ற ஆவலில் அவ்வாறு செய்தாள்.

# ஆண்டவர்களை நினைக்கும் நாட்டில் அறியாமைத் தாண்டவம்

(:0:)

## ரமணரும் அரவிந்தரும் இல்லா நாட்டில் அறியாமையில்லை

0

## இந்திமொழி—நம்மை அடிமைப்படுத்தும் கருவி

( 0 )

### தோழர் நெடுஞ்செழியன் சொற்பொழிவு

பலத்த கை தட்டுதலுக்கிடையே எழுந்து, தனக்கேஉரித்தான பாணியில் தோழர் இரா. நெடுஞ்செழியன் "கல்வித் திட்டம்" என்பது பற்றிப் பேசினர்.

அப்போது அவர் சொன்னதாவது:—

நமது நாட்டில் கல்வி பயின்றோர் தொகை மிகவும் குறைந்தது. ஆண்டவனைப் பற்றி நினைக்காத ரஷ்யாவில் நூற்றுக்கு ஐந்து பேர்கள் தான் படிக்காதவர்கள் என்று தெரிகிறது. ஆனல் சதா-சர்வகாலமும், ஆண்டவனைப் பற்றியும், கின்னரர், கிம்புருடர், முப்பத்து முக்கோடி தேவர், நாயன்மார்கள் இவர்களைப் பற்றிப் படித்துக்கொண்டும், பாடிக்கொண்டுமிருக்கும் நமது நாட்டில் ஏன் நல்ல முறையில் கல்வி இல்லை. ஏன் இத்தனைதற்குறிகள் இருக்கிறார்கள். நமது நாட்டின் பிரதமர் யார் என்றால் தெரியாது என்கிறான். உங்கள் ஊர் கர்ணத்திற்கு என்ன வேலை என்று கேட்டால் திகைக்கிறான் அந்தக் கர்ணத்திற்குத் தரப்பட்டுள்ள சட்டத்தின் அளவு என்ன என்றால் பதில் இல்லை. ஏன் இந்த நிலை இருக்கலாமா?

### இவர்கள் இல்லை அங்கு!

ரமணரும், அரவிந்தரும், ஐயப்பனும், காட்டேரிகளும் மேல்நாடுகளில் இல்லை. அந்த மேநாட்டில் எல்லாம் மக்களின் கல்வித் தொகை ஆண்டிற்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகிறது. இங்கு இத்தனைக் கடவுள்களும், பக்தன்வேண்டும்போது வந்து—வந்து போகும் பரமசிவனும், பார்வதியும் உள்ள நாட்டில் ஏன் படிப்பு இல்லை? பாரதமாதா புத்திரர்கள் பதவிக்கு வந்தார்களே இவர்களாவது இது பற்றிச் சிந்தித்ததுண்டா? எங்கேயாவது ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவியதுண்டா? செய்ய முடிந்ததா? வெறும் அலங்காரப் பொம்மைகளாக வந்தமர்ந்தார்களே தவிர, வேறு என்ன செய்ய முடிந்தது இவர்களால்? இவைகளைச் சொன்னால் நான் என்ன கல்வி நிபுணனல்லவே என்கிறார் கல்விமந்திரி மாதவமேனன். நிபுணரல்லாதவர் ஏன் மந்திரியாக வந்தார் என்று கேட்கலாமல்லவா? இன்றுள்ள கல்வித்திட்டம் இருக்கிறதே அதவகையில்லாத திட்டம் என்று பலர் சொல்லி இருக்கின்றனர். இன்று இலாகா இல்லாத மந்திரியாக இருக்கும் இராசகோபாலாச்சாரியார்கூடச் சொன்னர், இந்த வார்தா கல்வித் திட்டம் சுயநலம் காரணமாக, காந்தியார் சொன்னர் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ளதே தவிர அது நல்ல திட்டமல்ல என்று. இதையாவது தேசியத் தோழர்கள் கவனித்தார்களா? எனவே இன்றுள்ள கல்வித்திட்டம் கவைக்குதவாததிட்டமாகவே முடிந்துவிட்டது!

### மொழிப் பிரச்னை

அதுபோகட்டும் மொழி விஷயத்திலாவது இவர்கள் சரிவர நடந்தனரா? உலகத்தில் சிறு சிறு நாடுகள் எல்லாம் தங்களுக்கென இரண்டு-மூன்று மொழிகள் வைத்துக்கொண்டிருக்கின்றன தேசிய மொழியாக. ஆனல் இங்கு வளமிக்க மொழி தமிழ் இருக்க, இலக்கியமும், இலக்கணமும், பண்பாடும் நிறைந்த மொழி தமிழ் இருக்க தமிழன் மீது இந்தி கட்டாய பாடமாகத் திணிக்கப்படுகிறது. இந்த முறை ஏன் என்று கேட்கிறோம். இந்தி பொது மொழியாம் இருக்கலாம் உத்தர்பிரதேசத்திற்கு அது இருக்கலாம், மராட்டியத்திற்கும், வங்காளத்திற்கும், கன்னடத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் அது எங்ஙனம் பொதுமொழியாக இருக்க முடியும்?

சுற்றுச் சார்பைஅறிந்துகொள்ள தமிழ்மொழி போதுமானது. உலகத்தோடு தொடர்பு கொள்ள விஞ்ஞானத்தைத்தன்னகத்தேகொண்ட மொழி எதுவோ? பல கோடிக் கணக்கான மக்களால், பல நாட்டு மக்களால் பேசப்படும் மொழி எதுவோ, அதுதான் பொதுமொழியாக இருக்க முடியுமே தவிர இந்திதான் என்று எப்படிக் கூற முடியும்.

### பயனற்றமொழி

இந்தி மொழியால் ஜப்பான் காரனோடு தொடர்பு கொள்ள இயலாதே, இந்தி மொழியால் அமெரிக்காவுடன் பேச முடியாதே, இந்தி மொழியால்ஐரோப்பாவுடன் கடிதப் போக்குவரத்து நடத்த முடியாதே, இங்கெல்லாம் தொடர்பு கொள்ள மூன்று மொழிகள் தான் நமக்கு இருக்கின்றன. அவையாவன ஆங்கிலம், பிரான்ஸ், ஜெர்மனி, ஆங்கிலம்தான் மற்ற இருமொழிகளைக் காட்டிலும் பேச்சு வழக்கத்திலும், விஞ்ஞானத்திலும், இலக்கிய இலக்கணத்திலும் முன்னிற்கிறது. ஆகவே நமக்குப் பொதுமொழி ஆங்கிலம் போதுமென்கிறோம். தாய்மொழி தமிழ் போதுமென்கிறோம். எங்களுக்கு இந்திமீது வெறுப்பு இல்லை. ஆங்கிலம் செய்யக்கூடிய வேலையை இந்தி செய்யுமானல் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளத் தயார்தான் எங்கே யாராவது விளக்க முடியுமா?

இந்தியால் ஒரு பயன் என்னவென்றால் வடநாடு சென்று திரும்பலாம், அதுவும் ஒரு சில இடங்களுக்கே செல்லலாம். இந்திமொழியால் நாம் முன்னேற்ற மடைவதற்குப் பதிலாக, வடநாட்டான்தான் அதில் லாபமடைவானே தவிர நாம் அல்ல. ஆகவே நமக்கு இந்தி மொழி தேவை இல்லை. எனவே நமக்கு வாழ்நாள் பூராவும் பயன் படத்தக்க கல்வித் திட்டம்தான் தேவை என்று கூறுகிறேன். இத்துடன் மாநாடு இடைவேளைக்காக கலைந்தது.


நாகர்கோவிலில் நாஞ்சில் மாவட்ட

## திராவிட முன்னேற்றக் கழக

# முதல் மாநாடு

இடம்:—(கிருஷ்ணன் கோவில்) தியாகராயர் பந்தல்

(ஆங்கிலப் பாடசாலை சமீபம்)

டிசம்பர் 29, 30 (வெள்ளி சனி) நாட்களில்

தலைவர்:

## இரெ. இளம்வழுதி

துவக்குபவர்:

## என். எஸ். இளங்கோ

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, M. A., L. T., இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஈ. வி. கே. சம்பத், ஈ. வெ. அ. வள்ளிமுத்து, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் மற்றும் பல இயக்கத் தோழர்களும் பங்குகொள்வர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை,

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி

குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

## "நீதிதேவன் மயக்கம்"

வெள்ளி இரவு

## "சந்திரமோகன்"

சனி இரவு

வரவேற்புக்குழு.

# ஜீவாதாரப் பிரச்னையில் நிரந்தரக் கொள்கையற்ற ஆட்சி

—(o)—

## வகுப்பு உரிமை இல்லை என்றால் அரசியல் அமைப்பைத் திருத்துக

—(o)—

## அடக்குமுறை ஆட்சி ஒழிக

—(o)—

## கொடுமைக் காளான தோழர்களுக்குப் பாராட்டு

—o—

### காஞ்சிபுரம் மாநாட்டில் நிறைவேறிய முக்கியத் தீர்மானங்கள்

காஞ்சிபுரம், டிச. 24—

1. தமிழ்க்கடல் மறைமலை அடிகள், பேராசிரியர் ராமசாமி, சர்தார் பட்டேல், பெர்னாட்ஷா, திருப்பத்தூர் நகரசபைத் தலைவர் சுப்பிரமணியம், காஞ்சி வள்ளல் கந்தசாமி ஆகியோரின் மறைவு குறித்து இம்மாநாடு தன் ஆழ்ந்த துக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

2. மூன்றாவது உலகப் போருக்கான அறிகுறிகள் தென்படுவதைக் கண்டு கவலையுறுவதுடன், அது தவிர்க்கப்பட வேண்டுமென்றும், இம்மாநாடு கருதுகிறது.

(அ) உலக சமாதானம்திலைப்பதற்கான வழிவகைகளைகண்டு, அதற்கேற்ற முயற்சிகளைச்செய்வதில் இந்திய சர்க்கார், தயங்கக் கூடாதெனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

3. உணவுப்பஞ்சம் நாட்டின் நாற்பகுதிகளிலும் தலைவிரித்தாடுவதைக் கண்டு கவலைப்படுவதோடு, அதைத் தீர்க்கும் எல்லாவித ஏற்பாடுகளிலும், தங்களது ஒத்துழைப்பை அளிக்கத் தயாராகயிருப்பதாக இம்மாநாடு ஆளவந்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறது.

(அ) சென்னை மாகாண சர்க்கார், மக்களின் தவிப்பைப் பன்முறை எடுத்துச் சொல்லியும், கவனிக்காது புறக்கணிக்கும் இந்திய சர்க்காரின், போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) மக்களின் ஜீவாதாரமான உணவு விஷயத்தில், நிரந்தரமான கொள்கையில்லாமல் நடக்கும் முறை போபத்தைத் தரும் என்று இந்திய ஆட்சிக்கு இம்மாநாடு எச்சரிக்கிறது.

5. பொதுவாக திராவிட சமுதாயத்துக்கும் சிறப்பாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரது நல்வாழ்வுக்கும் காரணமாய் விளங்கிவந்த வகுப்புவாரி உரிமை முறையானது, இன்றைய புதிய இந்திய அரசியல் சட்டத்தின் துணையினால் செல்லத்தக்கதல்லவென்றாக்கிவிட்டார்கள். மாகாண ஆட்சியாளர்கள், இந்த சமூக நீதியை உயிர்ப்பிக்க, 'சுப்ரீம் கோர்ட்'வரை சென்றுள்ள நன்முயற்சியைப் பாராட்டுவதோடு, அங்கேயும் நீதி கிடைக்கவில்லையென்றால், இந்திய அரசியல் அமைப்பையே திருத்திடவும் தயங்கக் கூடாது என்று மாகாண சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

#### அடக்குமுறை தீர்மானம்

(அ) பொதுவாக மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளைப் பறிக்கும் வகையில் அரசியலார் விதித்துவரும் தடை உத்திரவுகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளுக்கும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகப் பிரசாரத்திற்கும் தடைவிதிக்கும் வகையில் அரசியலார் வீணான தங்களது அடக்குமுறைகளைக் கையாண்டு வருவதைக் கண்டிக்கும் முறையில் செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூரில் பேச்சுரிமையை நிலைநாட்ட 144 தடை உத்திரவை எதிர்த்து, ஆளவந்தாரின் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம், ஊரடங்குச் சட்டம் ஆகிய கொடுமைகளுக்கு ஆளாகி தொண்டு புரிந்த தோழர்களனைவரையும் இம்மாநாடு மிக மிக பாராட்டுகிறது.

(இ) அதேபோன்று திருச்சி மாவட்டம், நாரணமங்கலத்தில் 144 தடைஉத்திரவை துச்சமாக மதித்து கடுங்காவல் தண்டனையடைந்து திருச்சி சிறையிலிருந்து வரும் கழக வீரர்களையும் இம்மாநாடு பாராட்டுகிறது.

(ஈ) அரசியலார் மேலும் மேலும் தங்களது அடக்குமுறை ஆணவத்தை இவ்விதமே கையாண்டு வருவார்களேயானால், செயற்குழு தீர்மானத்திற்கேற்பதடைஉத்திரவுகளை எதிர்த்துப் பொதுவாக மனித உரிமையை நிலைநாட்ட செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் உறுதியுடனிருந்து பணியாற்றுமென இம்மாநாட்டின்மூலம் உறுதி கூறுகிறது.

நமது சென்னை மாகாணத்தில் பெருவாரியாக நூல் தயாராகியும் பஞ்சு வாங்குவது முதல் நூல் விநியோகம் வரையுள்ள முழு உரிமையையும் அதிகாரத்தையும் இந்திய மத்திய ஆட்சி தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, சென்னை மாகாணத்தின் முக்கியமான தொழிலான கைத்தறி நெசவுத் தொழிலைப்பற்றி கவலையின்றியும் வடநாட்டு மில் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வெளிநாட்டு நாணய செலாவணியை நோக்கமாகவும்கொண்டு சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகும் நூலை தங்கள் இஷ்டம் போல் எதேச்சதிகாரமாக எடுத்துக் கொண்டுபோவதால், சென்னை மாகாண கைத்தறி நெசவாளிகள் நூல் கிடைக்காமல், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை மிக, மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளபடியால், சென்னை அரசாங்கம் உடனடியாக சென்னை மாகாண நூல் உற்பத்தி, விநியோக சம்பந்தமான பூரண பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாலொழிய நிலைமையை சமாளிப்பதுசாத்தியமில்லையென்று இக்குழு சென்னை அரசியலாருக்கு அறிவுறுத்துவதுடன் உடனடியாக இப்பிரச்சினையைச் கவனிக்கும்படி அரசியலாரை வற்புறுத்துகிறது.

7. தமிழ் நாட்டிலுள்ள, இரயில்வே நிலையங்களிலுள்ள ஊர்ப்பெயர் அறிவிப்பு பலகைகளில், முதலில் இந்தியிலும், பிறகு ஆங்கிலத்திலும், இறுதியில் தமிழிலும் எழுதியிருக்கும் முறையை வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக இந்திப் பெயர்களை அகற்றிவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

(அ) செங்கற்பட்டு மாவட்டத்துக்கு நீர்ப்பாசனவசதி, நல்ல முறையில் கிடைக்கும் திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மேற்படி நீர்ப்பாசன வசதி சம்பந்தமாக, பல்லாண்டுகளுக்கு முன்னதாகவே போடப்பட்ட பாலாறு அணைக்கட்டுத் திட்டத்தை இந்நாள் காறும் நிறைவேற்றாமல் காலதாமதம் செய்து வரும் சர்க்கார் போக்குகண்டு இம்மாநாடு மிகமிக வருந்துவதோடு உடனடியாக நிறைவேற்றித் தருமாறு வேண்டிக்கொள்கிறது.

---

## அறிவிப்பு

---

24-12-50 காலை 5-30 மணிக்குச் சென்னையை விட்டுக் காஞ்சிபுரம் சென்ற பஸ் ஒன்று பூந்தமல்லிக்கு அடுத்த இரண்டாவது மைலில் ஆலமரத்தில் மோதி விபத்திற்குள்ளாகியது. இந்தபஸ்ஸில் முன்பக்கம் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் காஞ்சி மாநாட்டிற்காகப் போவதாகக் கூறினாராம். இவர் விபத்து ஏற்பட்ட இடத்திலேயே உயிர்துறந்தார். இவரது மண்டை உடைபட்டுச் சிதறி விட்டதால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையாம். வயது சுமார் 22 இருக்குமாம், வேட்டியும் ஷர்ட்டும் அணிந்து அதன் மேல் உல்லன் பனியன் போட்டிருந்தாராம். நிறம் சிவப்பு இது விஷயமாக விவரம் தெரிந்தவர்கள் மாலைமணிக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்

---

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I

## நம் இயக்க . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் நாட்டில் வேலை செய்து வருகிறது. காலத்திற்கேற்றவாறு புதுப்-புது கருத்துக்களைக் கொண்டு இயங்குவதால்தான் நமது கழகத்தை முன்னணி இயக்கம் என்று கூறுகிறோம். ஆனால் நாம் எவ்வளவு முன்னேறிச் சென்றாலும், நம்முடைய பழைய, சில முறைகளை மாற்றிக் கொள்ள முடியாது. உதாரணமாக மனிதன் தோன்றிய காலந்தொட்டு உடை உடுத்தி யிருக்கிறான். முன்னேற்றம் என்ற காரணத்திற்காக இந்த உடையை மாற்றிக்கொள்ள இயலாது. இருந்தாலும் பழமைகளைக் கூடக் காலத்திற்கேற்றபடி நாம் மாற்றியமைக்கலாம்.

விஞ்ஞானத்தின் மூலம் ஓர் அறிஞன் ஒரு கப்பலை உண்டாக்குகிறான் என்றால், இன்னொரு விஞ்ஞானி அணுக் குண்டைப் போட்டு, அக்கப்பலை உடைக்க முனைகிறான். எனவே ஒவ்வொன்றிற்கும் நாம் மாற்றம் காண முடியும்.

### ஆண்டானும்-அடிமையும்!

ஆளப்படுபவனும்-ஆளுபவனும் ஒன்றுமைப்பட்டால், கடவுளும்-பக்தனும் ஒற்றுமைப்பட்டால், கொடுப்பவனும் வாங்குபவனும் ஒற்றுமைப்பட்டால் இதைத்தான் நாம் முன்னேற்றம் என்கிறோம். தொழில் முறை என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் தமது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும். அப்படிச் செய்பவன் தான் முன்னேற்றத்தில் முழு நம்பிக்கைக் கொண்டவன் என்று கூறமுடியும்.

### உழுபவனே மேல்

இந்த நாட்டின் சொந்தக்காரன் எல்லா வகையிலும் உரிமை இழந்து இருக்கிறான். ஆனால் வந்தவன் சகல துறைகளிலும் உரிமை பெற்றுச் சுகமாக வாழுகிறான். இந்த நிலை என் வந்தது? நாம் நம்மை மதிக்க மறந்து விட்டோம். இந்த நாட்டின் உழைப்பாளிகளை, உழவர்களை மதிப்பதில்லை, இதனால்தான் இந்த நிலை ஏற்பட்டது. நல்ல நாணயங்கள் பதுங்கிக்கொண்டு, கெட்ட நாணயங்கள் (செல்லாத) வெளியே வந்து தாராளமாகத் தலை காட்டுவதுபோன்று, எங்கும் இன்று பொய்மைதான் தாராளமாக வெளி வருகிறது. நாட்டில் சாதி-சமயப் பூசல்கள் மலிந்துவிட்டன. இந்த நிலை மாற வேண்டாமா? மொழித்துறையில் அரசியல் துறையில் நம்மை எப்படி வெளிநாட்டான் காணுகிறான். தங்களது நாட்டில், தங்கள் சொந்தமொழி தான் தாய் மொழியாக இருக்கவும், இலக்கிய மொழியாக வளரவும் மேல் நாடுகளில் முயற்சி செய்யப்படுகிறது. ஆனால், இங்கு நமக்குத் தாய் மொழியிலே நல்ல பாடமில்லை. மொழி ஆராய்ச்சிகள் இல்லை. இந்நிலையில் இருக்கும் மொழியை அழிக்க இந்தி மொழிவேறு வந்துள்ளது. இந்தி மொழியின் வரவால் நமது குறிக்கோள்கள் எல்லாம் மறைந்து விடுமா? ஆதியில் பறையன் என்ற சொல் ஹரிஜன் என்று மாறி, பின்னர்த்தாழ்த்தப்பட்டவர் என்று திருந்தி இருப்பதைப் போல, வெறும் பெயர் மாற்றியதற்குப் பயன்படலாமே தவிர, இந்தி மொழியால் ஏதாவது பலன் உண்டா? என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். ஒரு காலத்தில் உலகத்திற்கு நாகரீகத்தைக் கற்பித்து வந்த இனம், இன்று தரணி இழந்து, தன்னையே மறந்து வாழ்கிறது. இதை மக்கள் உணர வேண்டும். உணர்ந்ந நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வாழ்நாள் முழுவதும் நீங்கள் இத்தொண்டாற்றி நம் கொள்கையைப் பரப்ப வேண்டும்”